# 16

## நபி r அவர்கள் ஓதிய சில துஆக்கள்

முன்னைய பாடத்தில் துஆவின் சிறப்பு, அதன் பயன், துஆக் கேட்பதன் ஒழுங்குகள் பற்றிக் கற்றுக் கொண்டோம். இப்பாடத்தில் முஹம்மத் நபி r அவர்கள் ஓதிய சில துஆக்களைக் கற்று, அவற்றை மனனமிட்டுக் கடைப்பிடித்து ஒழுகுவோம்.

اَللّٰهُمَّ يَا مُقَلِّبَ الْقُلُوْبِ ثَبِّتْ قَلْبِي عَلَى دِيْنِكَ

உள்ளங்களை மாற்றுபவனே, எனது உள்ளத்தை உனது மார்க்கத்தில் உறுதியாக்கி வைத்துவிடுவாயாக.

اَللّٰهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ مُوْجِبَاتِ رَحْمَتِكَ وَعَزَائِمَ مَغْفِرَتِكَ

وَالسَّلَامَةَ مِنْ كُلِّ إِثْمٍ ، وَالْفَوْزَ بِالْجَنَّةِ وَالنَّجَاةَ مِنَ النَّارِ

இறைவா! உனது அருட் பொக்கிஷங்களையும், உனது பாவ மன்னிப்பையும், பாவங்களிலிருந்து பாதுகாப்பையும், சுவனத்தின் வெற்றியையும் நரகத்திலிருந்து விமோசனத்தையும் உன்னிடம் வேண்டுகின்றேன்.

اَللّٰهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ الْهُدَى وَالتُّقَى وَالْعَفَافَ وَالْغِنَى

இறைவா! நான் உன்னிடம் நேர்வழியையும் இறை அச்சத்தையும் கற்பொழுக்கத்தையும் வாழ்க்கை வசதிகளையும் கேட்கின்றேன்.

اَللّٰهُمَّ اَعِنِّي عَلَى ذِكْرِكَ وَشُكْرِكَ وَحُسْنِ عِبَادَتِكَ

இறைவா! சதா உன் நினைவில் நிலைத்திருக்க எனக்கு உதவி புரிவாயாக. அத்துடன் உனக்கு நன்றி செலுத்தவும் அழகான முறையில் உன்னை வணங்கி வழிபடவும் எனக்கு உதவி புரிந்தருள்வாயாக.

اَللّٰهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ مِنَ الْخَيْرِ كُلِّهِ مَا عَلِمْتُ مِنْهُ وَمَا لَمْ أَعْلَمْ
وَأَعُوْذُ بِكَ مِنَ الشَّرِّ كُلِّهِ مَا عَلِمْتُ مِنْهُ وَمَا لَمْ أَعْلَمْ
وَأَسْأَلُكَ الْجَنَّةَ وَمَا قَرَّبَ إِلَيْهَا مِنْ قَوْلٍ اَوْ عَمَلٍ
وَأَعُوْذُ بِكَ مِنَ النَّارِ وَمَا قَرَّبَ إِلَيْهَا مِنْ قَوْلٍ اَوْ عَمَلٍ

இறைவா! நான் அறிந்ததும், அறியாததுமான எல்லா நன்மைகளையும் உன்னிடம் கேட்கின்றேன். அவ்வாறே நான் அறிந்ததும் அறியாதுமான எல்லாத் தீமைகளை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகின்றேன். சுவனத்தையும், அதற்கு இட்டுச் செல்லக் கூடிய சொல், செயல்களையும் உன்னிடம் கேட்கின்றேன். நரகத்தை விட்டும், அதற்கு இட்டுச் செல்லக்கூடிய சொல் செயல்களை விட்டும் பாதுகாப்புத் தேடுகின்றேன்.

اَللّٰهُمَّ عَافِنِيْ فِيْ بَدَنِيْ اَللّٰهُمَّ عَافِنِيْ فِيْ سَمْعِيْ
اَللّٰهُمَّ عَافِنِيْ فِيْ بَصَرِيْ لَا إِلٰهَ إِلَّا أَنْتَ

இறைவா! எனது உடலிற்கு நலன் அருள்வாயாக! இறைவா! எனது செவிப்புலனிலும் கட்புலனிலும் நலன் அருள்வாயாக! வணக்கத்துக்குரிய இறைவன் உன்னைத் தவிர வேறில்லை.

اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنَ الْكُفْرِ وَالْفَقْرِ،
وَأَعُوْذُ بِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ لَا إِلٰهَ إِلَّا اَنْتَ

இறைவா! இறை நிராகரிப்பை விட்டும் வறுமையை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன். மண்ணறையின் வேதனையை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன். வணக்கத்துக்குரிய இறைவன் உன்னைத் தவிர வேறில்லை.

எனவே, நபி (ஸல்) அவர்கள் செய்து வந்த துஆக்களை மனனமிட்டு, பொருளறிந்து எமது துஆக்களில் அவற்றையும் சேர்த்து பிரார்த்தித்து வருவோமாக!

**செயற்பாடு:**

குர்ஆனிலும் ஹதீஸிலும் வந்துள்ள துஆக்களை ஆலிம்களின் / ஆசிரியரின் துணைகொண்டு தொகுத்தெழுதி வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.